# இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஒலுவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**தாஜுதீன் முஹம்மது முபாஸ்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
mufasnmohamed@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் முக்கியமான தொழிலாக மீன்பிடித் தொழில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளில் ஒன்றாக ஒலுவில் கிராமம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் மரபு ரீதியாக விவசாயம், மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இக்கிராமத்தில் 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றனர் அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தை தேடுகின்றனர். மீனவ சமுதாயமானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக கடல் அரிப்பு, துறைமுகம் வருகையினால் காணி இழப்பு, மண் அகழ்வு என பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது. ஆயினும் தற்போது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்சமயம் இன்னும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றினை வெளிக்கொண்டுவருவதற்காக முதலாம் நிலைத் தரவுகளான நேரடி அவதானம், நேர்காணல் போன்ற முறைகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டு இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலமாக ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகளாக அதிகமான வறுமை நிலை, அதிக கடன் சுமை, வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணப் பொருட்கள் விற்பனையும் அடகு வைத்தலும், தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை ஏற்றம் முதலிய காரணங்களினால் தங்களின் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவற்றினை வெளிக்கொண்டு வருவதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொருத்தமான பரிந்துரைகளும் இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *மீன்பிடித் தொழில், மீனவச் சமுதாயம், பொருளாதார நெருக்கடி*

## ஆய்வு அறிமுகம்

அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளில் ஒன்றான ஒலுவில கிராமத்தில் மீன்பிடித் தொழிலிலை அடிப்படையாகக் கொண்ட மீனவச் சமுதாய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றனர். அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தில் தங்கியுள்ளனர். இவ்வாறு காணப்படுகின்ற மீனவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிந்து தங்களின் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். அந்த வகையில் இவர்கள் மயில் தத்தி, ஹம்பர் தத்தி, மைனர் தத்தி, 4000 தத்தி, பென்ஸ் வத்த தத்தி, ஏலங்கா தத்தி, பழைய தத்தி, சாக்கன் தத்தி, நட்டம் தத்தி, ராணி தத்தி, ஹிஜ்ரா தத்தி, வல்லரச தத்தி, புதுத் தத்தி என 13 கரைவலைகள் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டனர். ஒவ்வொரு கரைவலையிலும் சுமார் 100 க்கும் 150 க்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் தொழில் பெற்று தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர் (Nawas, 2018). இம்மீனவர்கள் அப்பிரதேச கரையோரத்தினை குடாத்துறை, நடுத்துறை, லைட் ஹவுஸ் துறை,

பின்னங்குடாத் துறை என நான்கு துறைகளிலும் 42 தோணிகளும் 205 இயந்திரப் படகுகளும் மாயவலை, ஆடுகயிறு, இழுவவலை, எறிகயிறு, சுருக்கு வலை, சில்லி வலை, பண்ணை என பல்வேறு அமைப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றில் ஒரு தோணியில் 7 ஊழியர்களாகவும் படகில் 5 ஊழியர்களாகவும் தொழிலைப் பெற்று தமது குடும்ப பொருளாதாரத்தை செப்பனிட்டுக் கொள்கின்றனர் (Nawas, 2018).

மீன்பிடிச் சமுதாயமானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்துள்ளது. அதிலும் குறிப்பாக கடல் அரிப்பு, துறைமுகம் வருகையினால் காணி இழப்பு, மண் அகழ்வு என பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அதாவது ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமைக்கப்படும் வரையான காலப்பகுதியில் ஒலுவில் பிரதேசத்தில் உள்ள பெருமளவு குடும்பங்கள் மீன்பிடித் தொழில் மூலமாக கிடைத்த வருமானத்தில் தமது வாழ்வை சிறப்பாக நடாத்தி வந்தனர். மீன்பிடியுடன் இணைந்ததாக உப்புக்கருவாடு பதனிடல் போன்ற தொழில் முயற்சிகளும் இடம்பெற்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் இச்சமுதாயமானது பல பிரச்சனையினை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தொழில் சம்பந்தமான பல்வேறு விமர்சனங்களும் கண்டனங்கள் மற்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒலுவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற மீனவச் சமுதாயமானது கடலரிப்புப் பிரச்சினை, அதிகமான வறுமை நிலை, அதிக கடன் சுமை, வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை ஏற்றம் என்பவற்றால் இத்தொழிலை மேற்கொள்ள முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சினைகளை மையப்படுத்திய வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் பல்வேறுபட்ட தரப்பினர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் முக்கியமாக பேசப்படுபவர்களில் மீனவச் சமுதாயமும் உள்ளடங்கப்படுகின்றது. குறிப்பாக இப்பொருளாதார நெருக்கடி மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரத்தினை மிக மோசமாகப் பாதிக்கின்றது என்பது தொடர்பாக பல சர்ச்சைகள் மேலேலுந்துள்ளது. அந்தவகையில் ஒலுவில் பிரதேசத்திலுள்ள மீனவச் சமுதாயமானது கடலரிப்புப் பிரச்சினை, அதிக வறுமை நிலை, அதிகமான கடன் சுமைகள், மீனவர்கள் கடற்றொழிலிலிருந்து வெளியேறுதல், மீனவர்கள் இத்தொழிலை கைவிட்டு வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மின் மற்றும் குடிநீர் கட்டணங்கள் அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மீனவத் தொழிலுக்காக கொள்வனவு செய்யப்படுகின்ற மூலப் பொருட்களின் விலை அதிகரித்தமை முதலிய அடிப்படையான பிரச்சினைகளை இப்பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளுகின்றது என்பதனை முக்கிய பிரச்சினைகளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

1. ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
2. இப்பிரதேசத்தில் மீனவர்கள் எதிர் கொள்ளும் தொழில் ரீதியான சவால்களை அடையாளப்படுத்துதல்.
3. இப்பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்குள் அமைந்துள்ள ஒலுவில் பிரதேசமானது இயற்கை சூழமைவினைக் கொண்டுள்ளதுடன் அதன் பிரதான எல்லைகளாக மேற்கே வயல்நிலத்தையும் வடக்கே தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் தெற்கே கப்பற்த் துறைமுகத்தையும் எல்லைகளாக கொண்ட பிரதேசமாகும். இங்கு மொத்தமாக 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் 10,545 மக்கள் வாழ்கின்றனர். அதில் ஆண்கள் 5,251 பெண்கள் 5,294 காணப்படுகின்றனர் (பிரதேச செயலக அறிக்கை, 2020). அந்த அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றன அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தை தேடுகின்றனர் (Nawas, 2018). இப்பிரதேசத்தில் இவ்வாறு வாழ்வாதாரத்தைத் தேடுகின்ற மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வு இடைவெளி**

ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சில ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தாலும் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியின் பின்னர் இப்பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் இதுவரையில் செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் இவ்இடைவெளியினை பூர்த்தி செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதல் நிலைத்தரவுகள் நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. இங்கு நேர்காணலானது துறைசார் நிபுணர்கள், மீனவர் அமைப்புக்கள், கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள், மீனவச் சமுதாயத்தில் உள்ள இல்லத்தரசிகள் ஆகியவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் இது ஒரு விவரண ரீதியானதும், பண்பு ரீதியானதுமான ஆய்வாக அமைகின்றது.

**பெறுபேறுகளும் முடிவுகளும்**

இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இதனோடு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட விடயங்களை பின்வருமாறு தொகுத்து நோக்க முடியும்.

***கடலரிப்புப் பிரச்சினை***

கிழக்கு மாகாண கரையோரத்தினை பொறுத்தவரையில் மிகவும் அதிகமாக பேசப்படுகின்ற பிரதானமான பிரச்சினையாகவே இக்கடலரிப்புப் பிரச்சினை காணப்படுகின்றது. குறிப்பாக கடலரிப்பு பிரச்சினையானது ஒலுவில் துறைமுகம் வந்ததன் பின்னரே அதிகமான தாக்கத்தினை கரையோர பிரதேசங்களில் ஏற்படுத்துகின்றது (நேர்காணல், 2023). ஆகவே ஆரம்பகாலங்களில் பருவகாலங்களில் மட்டுமே சாதாரணமான கடலரிப்பு இப்பிரதேச கடல்பரப்பில் ஏற்பட்டுள்ளது. துறைமுகம் மற்றும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் கடலரிப்பினை உயர் அதிகாரிகள் கண்டுகொள்ளாமையினால் இன்று கடலரிப்பு பாரியளவில் உக்கிமடைந்துள்ளது (நேர்காணல், 2023). அதுமட்டுமில்லாது அதன் தாக்கமானது இப்பிரதேசத்திற்கு அண்மித்த கரையோர பிதேசங்களிலும் (அட்டப்பளம், நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது) பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்த கடலரிப்பினால் ஒலுவில் மீனவர்கள் தங்களில் நாளாந்த வாழ்வாதாரத்தினை தேடிக் கொள்வதில் அதிக சவால்களை எதிர் கொள்கின்றனர். தங்களின் படகுகளை நகர்த்த முடியாமலும் அதனை உரிய இடத்தில் நிறுத்திவைக்க முடியாமலும் நாளுக்கு நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக கூறுகின்றனர் (நேர்காணல், 2023). இந்த சவால் காரணமாக ஒலுவிலை அண்மித்த ஏனைய பிரதேச கரையோரங்களிலும் கடலரிப்பினால் மீனவர்கள் பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளுக்குள் அகப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

***அதிக வறுமை நிலை***

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது பல்வேறு மட்டங்களில் வறுமை நிலையினை ஏற்படுத்தியுள்ளதுடன் அதன் தாக்கம் தொடர்ச்சியாக பல மட்டங்களில் காணப்படுகின்றது. அந்த வகையிலேயே கடந்த காலங்களை விடவும் இப்பொருளாதார நெருக்கடியின் மூலமாக மீனவச் சமுதாயமானது அதிக வறுமை நிலைக்கு உட்பட்டு பசி, பட்டினியில் தனது நாளாந்த வாழ்வினை கடத்திவருகின்றனர். இந்த நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் ஒருவேளைக்கான சாப்பாட்டுக்கே அதிகமாக கஷ்ரப்பட்டோம், பெரும்பாலான நாட்கள் மீன் கறியினையே மாத்திரம் சமைத்து உண்டோம் இதர பொருட்கள் வாங்க

முடியவில்லை, மண்ணெண்ணையின் விலையேற்றத்தினால் கடலுக்கு தொடராக செல்லமுடியாத நிலை அதனால் பல நாட்கள் குடும்பமே பட்டிணியாக இருந்தோம், சில வேலைகளில் இந்த பசி, பட்டினியினால் பிள்ளைகள் படும் கஷ்டத்தினை கண்களால் பார்க்க முடியாமல் அசாதாரண காலநிலையிலும் கூட உயிரினைப் பணையம் வைத்து கடலுக்கு சென்ற சரித்திரமும் உண்டு எனக் குறிப்பிட்டனர் (நேர்காணல், 2023). இவ்வாறு மீனவச் சமுதாயமானது இந்நெருக்கடி காலங்களில் அதிகமான வறுமையினால் அல்லோலப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

***அதிகமான கடன் சுமைகள்***

மீனவச் சமுதாயமானது இயல்பாகவே தங்களின் குடும்ப வாழ்க்கையினை சமநிலைப்படுத்தி கொண்டு செல்ல வேண்டுமாயின் பணம் உள்ளவர்களிடம் கடன்களைப்பெற்றும், கடைகளில் தமக்குத்தேவையான பொருட்களை கடன்களுக்கு கொள்வனவு செய்பவர்களாகவே பெரும்பாலான மீனவச் சமுதாயத்தினர் காணப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடியின் பின்னர் அதிகமான கடன் சுமை சுவிகரித்துக்கொண்டது. அதனை மீளச் செலுத்த முடியாமல் அவதிப்பட்டோம் இப்போதும் படுகின்றோம் உதவி செய்ய யாருமே இல்லை (நேர்காணல், 2023). இந்த நெருக்கடியின் பின்னர் முன்பிருந்த கடன் சுமையினைவிட அதிக கடன் சுமையினை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளதனை அறியமுடிகின்றது. கடைகளில் கடனுக்காக பொருட்களை கொள்வனவு செய்து பின்னர் நாங்கள் மீன்களை அதிகமாக பிடித்து அதிக வருமானம் கிடைகின்ற போது கடன்களை மீளச் செலுத்துவதுண்டு ஆயினும் இந்நெருக்கடிகாலத்தில் அதிகமாக வருமானம் வருகின்ற காலம் வரவே இல்லை எனவும் அதிலும் எங்களுக்கு வருகின்ற வருவாயினை விட செலவுகளே அதிகமாக இருந்தமை எமக்கு பாரிய இழப்பாகவும் இது அதிக கடன் சுமைக்கும் காரணமாகவும் இருந்தது என்கின்றனர் (நேர்காணல், 2023). இவ்வாறு இருக்கையில் ஒரு இல்லத்தரசி குறிப்பிடும் போது அன்றைய சூழ்நிலையில் கடன்களை நாங்கள் வாங்காமலிருந்திருந்தால் இன்று நாங்கள் உயிருடன் இருக்கமுடியாமல் போயிருக்கும் (நேர்காணல், 2023) எனக் குறிப்பிட்டார். ஆகவே இச்சமுதாயத்தினர் அதிகமாக கடன் சுமையினை கொண்டவர்களாக உள்ளதுடன் நாங்கள் இந்நெருக்கடியில் உயிர் வாழ வேண்டுமாயின் கட்டாயம் கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டமையே இக்கடன் சுமைக்கு காரணம் என்பதனை எடுத்துரைக்கின்றனர். இம்மீனவச் சமுதாயம் குறிப்பாக கடைகளில் வாழ்வாதாரம் சார்ந்தோ அல்லது தங்களின் தொழில் சார்ந்தோ கொள்வனவு செய்கின்ற அநேகமான பொருட்கள் கடனுக்கே கொள்வனவு செய்யப்படுதாக அறிந்துகொள்ள முடிந்தது.

***மீனவர்கள் கடற்றொழிலிலிருந்து வெளியேறுதல்***

மீன்பிடித் தொழிலானது ஒரு பரம்பரைத் தொழிலாகக் காணப்படுகின்றது. மீனவ சமூகத்தினர் இத்தொழிலினை பரம்பரை பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருகின்றனர். ஆயினும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் பலர் இத்தொழிலை கைவிட்டு வேறு தொழில்களை நாடிச்செல்லுகின்ற போக்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக

மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட பலர் கடைகளில் வேலைகளுக்கும், மேசன் வேலைக்கும், கொழும்புக்கு வேலைக்காக செல்வதாகவும் கூறுகின்றனர். எனவே இப்பிரதேச மக்கள் இப்பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக மீன்பிடித் தொழிலிலிருந்து வெளியேறும் போக்கு காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

***கடற்றொழில் சார் பொருட்களின் விலையேற்றமும் அதிக செலவும்***

மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு பிரதானமாக பல்வேறு மூலப்பொருட்கள் தேவையாக உள்ளன அந்த வகையில் மிக முக்கியமாக மண்ணெண்னை, மீன்பிடி வலைகள், மோட்டர் முதலியவற்றிற்கு கடந்த காலங்களை விட தற்போது மூன்றுமடங்காக விலையேற்றப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மண்ணெண்னை 3 லீட்டர் 70 ரூபாய்க்கு வாங்கினோம். ஆனால் பொருளாதார நெருக்கடியின் போது 430க்கு மேல் அதிகரித்தது. இன்றைக்கு 231 ரூபாயாக உள்ளது. அதைவிட மோட்டர் பழுதானால் பாரிய செலவை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இருப்பினும் மீனுக்கான விலை குறைவாகத் தான் இருக்கின்றது (நேர்காணல், 2023). இதிலும் கடந்த வருடமெல்லாம் மண்ணெண்னையினை கொள்வனவு செய்ய கடுமையாக இடர்களினை மீனவச் சமுதாயம் எதிர்கொண்டது. குறிப்பாக வரிசை முறையில் காத்திருத்தல், மண்ணெண்னையினை கொள்வனவு செய்யும் அளவு வரையறுக்கப்பட்டமை, மண்ணெண்னையின் கொள்வனவு செய்ய காலதாமதம், மண்ணெண்னையின் விலை சடுதியாக அதிகரித்தமையினால் இத் தொழிலை மேற்கொள்வதில் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்கள் இத்தொழிலை மேற்கொள்வதற்காக செய்கின்ற செலவுகளை மீன் விற்பனையின் போது பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதோடு சமகாலத்தில் மீன்களின் விற்பனை விலையிலும் பாரிய வீழ்ச்சி நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர் (நேர்காணல், 2023). இன்று இவ்வாறான சிரமங்கள் சற்று குறைந்தாலும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் இன்னும் மீனவச் சமதாயத்தினை விட்டுச்செல்லவில்லை.

***மீனவர்கள் இத்தொழிலை கைவிட்டு வெளிநாடு செல்லுதல்***

இன்றைய சூழ்நிலையில் பல்வேறு தொழில் துறைசார்ந்து தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அதற்காக கூறப்படுகின்ற பிரதானமான காரணம் இலங்கையில் காணப்படும் பொருளாதார நெருக்கடியாகும். அவ்வாறான நிலையினை அடிப்படையாகக் கொண்டு கடல் தொழிலை மேற்கொள்கின்ற பலர் இப்பொருளாதார நெருக்கடியினால் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ள சென்றுவிட்டனர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பலர் வெளிநாடுகளுக்கு தொழில்களை தேடி சென்றுவிட்டனர். இவர்களில் மீன்பிடித் தொழிலை புதிதாக கற்றுக் கொண்டவர்களே அதிகம் (நேர்காணல், 2023). இந்த அடிப்படையில் நோக்கும் போது இளம் வயதினர், மீன்பிடித் தொழிலை கைவிட்டு கஷ்டப்பட்டாலும் பிரச்சினையில்லை எனக்கூறிவிட்டு வெளிநாடு செல்வதானது இத்தொழில்த் துறையின் வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட முடிகின்றது. இத்தொழிலினை சரியாகச் மேற்கொள்ள முடியவில்லை என்பதனால் மீனவர்கள் தங்களின்

படகுகள், வாகனங்கள் என்பவற்றினை விற்றுவிட்டும் கைமாற்றாக கடன்களை வாங்கிவிட்டு விலைவாசி அதிகம் என்பதால் வெளிநாடு சென்றுவிட்டனர் அதில் 30 - 40 வரையான வயதினரே அதிகமாக இருப்பர்'' (நேர்காணல், 2023) எனவும் குறிப்பிட்டனர். தற்போதைய நிலையை அவதானிக்கும் போது பெண்கள் வெளிநாட்டிற்கு தொழில் நிமித்தம் செல்லுதல், வெளிநாடுகளுக்குச் சென்ற ஆண்கள் தொழில் தெரியாமையினாலும், அங்குள்ள சூழலுக்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியாமலும் இடையில் நாடு திரும்பி கடனாளிகளாக மாறியுள்ளனர் (Nawas, 2018). இவ்வாறு வெளிநாடு செல்ல பல செலவுகளை செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவோம் என்று உறுதியளித்த இடைத்தரகர்களும் இவர்களை ஏமாற்றிய சந்தர்பங்களையும் அறிந்துகொள்ள முடிந்தது.

***மின், குடிநீர் கட்டணங்கள் அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு***

அண்மையில் மின், குடிநீருக்கான கட்டணங்களானது பல்மடங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இப்பிரதேச மீனவச் சமூகமானது பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது. குறிப்பாக இப்பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான குடும்பத்தினர் மின் இணைப்பினையும் குடிநீர் வசதியினையும் கட்டணம் செலுத்தியே பெற்றுக்கொள்கின்றனர் ஆதலால் தற்போதய சூழ்நிலையில் மாதம் தோறும் முன்னரை விடவும் பல்மடங்காக இக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதனால் இதனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். அதிலும் ஒரு சிலர் இக்கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்த முடியாமையினால் குறித்த இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு இன்று வரையில் சில மீனவக் குடும்பங்கள் இதனை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் சிரமத்தனை எதிர் நோக்குவதனையும் அவதானிக்க முடிகின்றது.

***தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும்***

இப்பொருளாதார நெருக்கடியின் பின்னர் கடுமையாக கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த நகைகள் அடகுவைப்பதனை விடவும் தற்காலத்தில் பண நெருக்கடியினால் விற்பனை செய்கின்ற போக்கு காணப்படுகின்றது. அதிலும் பிள்ளைகளின் திருமணத்திற்காகவும், அவர்கள் அணிவதற்காகவும் வைத்துள்ள தங்க ஆபரணங்களை பொருளாதார கஷ்டத்தினால் விற்றுவிட்டோம் என்கின்றனர் (நேர்காணல், 2023). பெண்கள் வருமானப்பணத்தில் செலவு போக ஏனையதை மீதம் பிடித்து வாங்கிய அல்லது வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆபரணங்களாகவே இவைகள் உள்ளதனை நேர்காணலின் போது அறிய கிடைத்தது. இன்று அந்த ஆபரணங்கள் இல்லாமையினால் எங்களுடைய பெண் பிள்ளைகளின் நிலையினை நினைக்கும் போது கவலையாக இருக்கின்றது (நேர்காணல், 2023) எனச் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறே இன்னும் சில மீனவக் குடும்பங்கள் தங்க ஆபரணங்களை வங்கிகளில் அடகுவைக்கின்ற சூழ்நிலைக்கு இப்பொருளாதார நெருக்கடி தள்ளியுள்ளமையானது பாரிய பிரச்சினையாகவுள்ளதுடன் இதனை வைக்கப்பட்ட அடகினை மீளமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

***மீனவச் சமூகத்திலுள்ள பிள்ளைகளின் கல்விசார் பாதிப்பு***

பொதுவாகவே இலங்கையில் ஏற்பட்ட இப்பொருளாதார நெருக்கடியானது கல்வித்துறையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள நிலையில் இப்பிரதேச மீனவச்சமுதாயத்தில் காணப்படுகின்ற கல்விகற்கக்கூடிய மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் பிள்ளைகள் தானியார் பாடங்களுக்கான கட்டணங்கள், பாடசாலை உபகரணங்கள் என பல செலவீனங்களை மேற்கொள்வதில் நெருக்கடியினை மீனவச் சமுதாயத்தினர் எதிர் கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. சில வேளைகளில் கட்டணங்கள் செலுத்துவதில் காலதாமதம் ஏற்படுமிடத்து பிள்ளைகள் குறித்த வகுப்புகளுக்குச் செல்வதில் பின்வாங்குகின்ற நிலையினை (நேர்காணல், 2023) பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

**பரிந்துரைகள்**

- கடலரிப்புப் பிரச்சினை இழிவளவாக்குவதற்காக முறையான வேலைத்திட்டத்தினை கடற்றொழில் அமைச்சு, கரையோர பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளுதல் வேண்டும்.

- மீனவச் சமுதாயத்தினருக்கு அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலமாக வாழ்வாதார உதவிகள் வழங்குதல்.

- மின், குடிநீர் கட்டணங்கள் மற்றும் தங்க ஆபரணங்களை அடகுவைத்தல் முதலியவற்றுக்கான பணத்தினை மீள்செலுத்தல் தவணைக்காலங்களை நீடித்தல்.

- தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலையேற்றத்தினை கட்டுப்பத்துவதுடன் அப்பொருட்களுக்கு நியாய விலையையும் அரசாங்கம் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

- தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் மீன்களின் கொள்வனவு விலையினை நிர்ணயம் செய்வதோடு விற்பனை செய்வதற்கான நிலையான சந்தை வாய்ப்புக்களையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**முடிவுரை**

ஒலுவில் பிரதேசமானது ஆரம்ப காலத்தினை விடவும் கப்பல் துறைமுகம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மீன்பிடிச் சமுதாயமானது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்ற இச்சூழலில் அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடியானது இன்னும் இப்பிரச்சினைகளை பல்மடங்காக மாற்றியுள்ளதோடு மீனவச் சமுதாயம் மீன்பிடித் தொழிலை சிறப்பாக மேற்கொள்ள முடியாமல் கடலரிப்பு, அதிக

வறுமை நிலை, அதிகாமான கடன் பிரச்சினைகள், வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மீனவத் தொழிலுக்கான கொள்வனவுப் பொருட்களின் விலை அதிகரித்தமை முதலிய அடிப்படையான பிரச்சினைகளை எதிர்கொள்ளச் செய்துள்ளமையை அறிய முடிகின்றது. ஆகவே இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதன் காரணமாக இத்தொழில் சம்பந்தமாக பாரிய விமர்சனங்கள் இம்மீனவச் சமுதாயத்திடையே ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சனையினை தீர்ப்பதற்காக அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களையும், உதவித் தொகைகள் மற்றும் மானியங்கள் வழங்க முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆகவே அரசாங்கம் இவர்களின் தேவைகளை கருத்திற் கொண்டு அதனை தீர்த்துக் கொள்ளும் போதே நாட்டினது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்கினை இச்சமுதாயத்தினால் வழங்க முடியும் என்பதுடன் இப்பிரச்சினைகளிலிருந்து மீனவ சமுதாயமும் மீள முடியும்

.

**உசாத்துணைகள்**


Auditor General's Department. (2015). ஒலுவில் துறைமுக நிர்மாணத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தாக்கங்கள். http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2015/peformence_report_2015/OluvilReportT.pdf

அமீர்தீன் ர, ஹில்மியாஸ். ஸ.(2017). ஒலுவில் துறைமுக அபிவிருத்தியும் அதனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார தாக்கங்களும். *KALAM - International Research Journal*,10 (1), 25-33.

BBC NEWS. (2018, August 9). இலங்கை ஒலுவில் துறைமுகம்: மக்களும் மீனவர்களும் எதிரும் புதிருமாக போராட்டம். *BBC NEWS தமிழ்.* Retrieved July 27, 2023, from https://www.bbc.com/tamil/sri-lanka-45801729

Fowzul Ameer ML. (2015). Physical Impacts Of Oluvil Harbour**.** *5th International Symposium 2015 – IntSym 2015, SEUSL* (p 450-461).

Rafeeka Ameerdeen. S & Hilmiyas. S. (2021). கல்முனை கடற்றொழில் மாவட்டத்தின் கரைவலை மீன்பிடித்தொழில் பற்றிய ஆய்வு. *KALAM – International Journal*,14(1).

Nawas A.N.M & Habeebullah M.T. (2018). ஒலுவில் துறைமுகமும் சூழல், சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும். *Proceedings of 8th International Symposium-2018*, *SEUSL*,264-272).

Saujan. I. & Nawas A.N.M. (2018). துறைமுகமும் மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்: ஒலுவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு, https://www.researchgate.net/profile/Iqbal-Saujan/publication/335684594_PORT_AND_CHALLENGES_FACED_BY_FISHERIES_THE_STUDY_BASED_ON_OLUVIL_REGION/links/5d749b09a6fdcc9961b

7811b/PORT-AND-CHALLENGES-FACED-BY-FISHERIES-THE-STUDY-BASED-ON-OLUVIL-REGION.pdf

பிரதேச செயலக அறிக்கை, 2020

மப்றூக் யூ.எல். (12 ஜனவரி 2020). இலங்கையில் கடலரிப்பால் மறையும் நிலங்கள்: தவிக்கும் கடலோர மக்கள். Retrieved Oct 23, 2023 from, https://www.bbc.com/tamil/sri-lanka-51078058

ஸமட் எம்.எம்.ஏ, (2018). ஒலுவில் துறைமுக விவகாரம்: நிரந்தரத் தீர்வு எப்போது? Retrieved July 23, 2023, from https://www.madawalaenews.com/2018/10/oluvl.html3

றிப்தி அலி. (24 FEB 2022). கப்பல் ஒன்றுகூட நுழையாத ஒலுவில் துறைமுகம். *Virakesari*. Retrieved July 27, 2023, from https://www.virakesari.lk/article/123036